ISSN:2582-9599

# அகராதிகளில் மொழியியல் கூறுகள்

முனைவர். செ.நான்சி
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி-02.

20

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதகுல வரலாற்றில் தகவல்தொடர்புக் கருவியாகப் பயன்படும் மொழியானது மனிதனைப் பிற விலங்குகளிடமிருந்து வேறுபடுத்தும் பண்பாட்டு அடையாளமாக விளங்குகிறது. காலந்தோறும் வடிவத்தில் மட்டுமன்றிப் பொருண்மையிலும் ஒவ்வொரு மொழியும் மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. மொழியின் இத்தகைய வளர்ச்சிப் போக்கினைக் குறிப்பிட்ட மொழிபேசும் பயனாளர் அறிந்துகொள்ளவும், புதிதாக வேறொரு மொழியைக் கற்றுக்கொள்ளவும் துணைசெய்யும் கருவிகளாக அகராதிகள்அமைகின்றன. இத்தகைய அகராதிகளில் சொற்கள் இடம்பெறும் ஒழுங்குமுறை, அவை உணர்த்தும் பொருண்மை போன்ற சொற்றொகுப்பு முறைகளை விளக்கியுரைக்கும் துறையாக அகராதியியல் விளங்குகிறது.

மொழிகளைக் குறித்து அறிவியல் அடிப்படையில் ஆராய்கின்ற துறையாக மொழியியல் விளங்குகிறது. மொழிகளின் அமைப்பு, பெறுகின்ற வடிவம், அந்த அமைப்பில் பங்குபெறும் நிலைகள், கூறுகள், அலகுகள், அவற்றுக்கிடையேயான தொடர்புகள், அவற்றால் வெளிப்படுத்தப்படும் மொழியமைப்பு ஆகியவற்றை ஆராய்வதே மொழியியலாகும்.

**திறவுச்சொற்கள்:** பொருண்மை – பொருள், உருபன் - ஒலிக்கூறு, தொடரியல் - சொற்களின் வரிசை, நிகண்டு - தொகுப்பு, கூட்டம், சொல் தொகை, பிரபந்தம் - நன்கு கட்டப்பட்டது

**முன்னுரை**

உலகில் மொழி என்பதொன்று தோன்றி அதன் வாயிலாகத் தன்கருத்துக்களை என்றைக்குப் பிறிதொரு மனிதனுடன் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தானோ அன்றையிலிருந்து கருத்துப் போராட்டத்தின் வரலாறு தொடர்ந்து வருகிறது. இவ்வாறு காலந்தோறும் மொழியில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்வதாகவும் மொழியியல் வளர்ந்து வருகிறது. சொல்பற்றிய அறிவியல் ஆய்வாக அமையும் அகராதியியல், மொழி பற்றிய அறிவியல் ஆய்வான மொழியியலோடு பல்வேறு நிலைகளில் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது. அகராதிகளில் எழுத்துமுறை, ஒலிப்புமுறை ஆகியவற்றைப் பதிவுகளில் தருவதற்கு ஒலியனியல் தேவைப்படுகிறது. ஒவ்வொரு சொல்லின் இலக்கணப்பொருள் வரையறைக்கு உருபனியலும், தொடர்களில் இடம்பெறும் சொற்களின் அமைப்பை ஆராய்வதற்குத் தொடரியலும், சொல் உணர்த்தும் பல்வேறு பொருண்மைகளை விளக்குவதற்குப் பொருண்மையியலும் துணைபுரிகின்றன. இவ்வாறு ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் ஆகிய மொழியியலின் கூறுகள் அகராதி உருவாக்கத்தில் முக்கிய பங்குவகிக்கின்றன.

**அகராதியியலில் மொழியியலின் பிரிவுகள்**

ஓர் அகராதியியலாளர் தம் அகராதியை உருவாக்குவதற்கு மொழியியலின் பல்வேறு பிரிவுகள் துணைபுரிகின்றன. அகராதிச் சொல்லாகத் தெரிவு செய்யப்படும் சொல்லின் வழக்குப் பயிற்சியை அறிய புள்ளிவிவர மொழியியல் தேவைப்படுகிறது. தலைச்சொல் தெரிவிற்குமுன் எழுதப்படவேண்டிய இலக்கணத்திற்கான தரவுகளைத் திரட்டுவதற்கு விளக்க மொழியியல் துணைபுரிகிறது. பழஞ்சொற்கள், வழக்கொழிந்த சொற்கள், புதுச்சொற்கள் போன்ற காலக்குறிப்பான்களைத் தெரிவுசெய்ய வரலாற்றுமொழியியல் தேவைப்படுகிறது. பேச்சுவழக்கு, வட்டாரவழக்கு, கொச்சைவழக்கு, அணிநயப்பொருள், மங்கலவழக்கு, இடக்கரடக்கல் போன்றவற்றைத் தருவதற்குச் சமுதாய மொழியியல் பயன்படுகிறது. மொழி வளர்ச்சிக்கெனப் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுதலும் இன்றைய இன்றியமையாத தேவையாக உள்ளது. மொழிகளில் புது அகராதிகள், கலைச்சொல் தொகுப்புகள், அறிவுத்துறைக்கான பாடப்புத்தகங்கள், பேரகராதிகள், மொழிபெயர்ப்புகள் போன்றவை எல்லாம் உருவாக்கப்படுதல் வேண்டும். “இதற்கான கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் சமுதாயமொழியியல், கணிப்பான்மொழியியல், அகராதியியல், மொழிபெயர்ப்பியல் போன்ற பிரிவுகள் வழங்குகின்றன.”1 அகராதிகளை உருவாக்குவதில் இவ்வாறு அகராதியியல் நெறிமுறைகளும், மொழியியல் ஆய்வுகளும், முன்பு வெளிவந்துள்ள அகராதிகளும் தம் பங்களிப்பை ஆற்றிவருகின்றன.

**அகராதியியல் - விளக்கம்**

ஒரு மொழியின் செழுமை அம்மொழியில் எழுந்துள்ள இலக்கிய, இலக்கண உருவாக்கங்களைப் பொருத்து அமைகிறது. ஆகராதி உருவாக்கமும் அதனை அடியொற்றியதே ஆகும். சமூக வரலாற்றையும் மொழி வரலாற்றையும் அறிய இலக்கியங்களும், மொழியின் ஒழுங்கை அறிய இலக்கணங்களும் பயன்படுவதைப் போலச் சொற்பொருளை அறிய அகராதிகள் துணைசெய்கின்றன. கருத்துப்பரிமாற்றமே மொழிப் பயன்பாட்டின் அடிப்படையாக அமைந்துள்ளது. இக்கருத்துப் பரிமாற்றம் இரு மனிதர்களுக்கு இடையே நடைபெறாத இடங்களில் அகராதிகள், இடைநின்று பொருளறிவிக்கின்றன. காலந்தோறும் சொற்கள் உணர்த்தும் பொருண்மைகளில் ஏற்படும் மாற்றங்களை உரைப்பனவாய் அகராதிகள் உள்ளன.

“தீங்கற்ற அடிமை வேலை எனப்பெறும் அகராதி உருவாக்கப்பணி பற்றி இருவிதச் சிந்தனைகள் உள்ளன. மிகக் கொடிய குற்றவாளிகளைத் தூக்கில் போட்டோ அல்லது கடினமான வேலைகளைச் செய்யச் சொல்லியோ தண்டித்தல் வேண்டாம். ஆனால் அவர்களை அகராதிகளைத் தொகுக்கச் சொல்லித் தீர்ப்பளிக்கலாம். ஏனென்றால் எல்லாத் துன்பங்களும் இப்பணியில் அடங்கியுள்ளன”2 என்னும் ஜே.ஜே.ஸ்கேலிஜரின் கூற்றுஅகராதி உருவாக்கத்தைத் துன்பமான பணியாக அடையாளம் காட்டுகிறது. “அகராதிப் பணியில் ஈடுபடுவதைக் காட்டிலும் அனுபவித்துச் செய்யத் தக்க மகிழ்ச்சியான அறிவுச் செயற்பாட்டை நான் அறியவில்லை.

தினமும் வழக்கமாய்ச் சிறிய ஆனால் கவனத்தைக் கவர்கிற, ஆர்வமூட்டக்கூடிய புதுப்புதுச் சிக்கல்களால் ஒருவர் எதிர்கொள்ளப்படுவதும் நாளிறுதியில் மொத்தமாய்ச் சோர்வடைவதும் இயல்பாய் இருப்பினும் நாளும் சில பணிகளை நிறைவேற்றுவதும் முழுப்பணியும் அதன் முழுமைநோக்கி முன்னேற்றுவதுமான எண்ணம் நிறைவை ஏற்படுத்துகிறது”3 என்னும் ஜே.ஆர்.ஹல்பெர்ட்டின் கூற்று அகராதி உருவாக்கத்தை மகிழ்ச்சியான அறிவுச்செயற்பாடாக எடுத்துரைக்கிறது. உண்மையில் ஒவ்வொரு அகராதியியலாளரும் மகிழ்ச்சி, துன்பம்ஆகிய இருவேறு அனுபவங்களைப் பெற்றிருப்பர். அகராதிகளின் உருவாக்கம் மட்டுமல்ல, பல்வேறு அகராதிகளிலிருந்தும் தரவுகளைத் திரட்டிப் பதிவமைப்பு நெறிமுறைகளை ஆராய்ந்து முறைப்படுத்தி, அகராதி உருவாக்க நெறிமுறைகளை வரையறுக்கும் அகராதியியல் குறித்த நூல்படைப்பும் இத்தகு அனுபவங்களை உள்ளடக்கியதே ஆகும். இன்றைய சூழலில்; அகராதித் தொகுப்பு முறை குறித்த ஆய்வுகளும் அகராதியில் இடம்பெறும் ஒருபொருட்பலசொல், பல்பொருள் ஒருசொல், ஒப்புருச்சொல், எதிர்ச்சொல் பற்றிய விளக்கங்களும் ஆய்வுகளும் மொழியியல் ஆய்வின் தாக்கத்தால் மெதுவாக வளர்ந்து வருகின்றன. இத்தகைய ஆய்வுகள் பல கலைச்சொற்கள் தோற்றம் பெறக் காரணமாக அமைகின்றன.

**தமிழ் அகராதியியல்**

“பிரிட்டிஷார் நடைமுறைப்படுத்திய நவீன மூன்றடுக்குக் கல்விமுறைக்கு முன்னர் தமிழகத்தில் இலக்கணச் சூத்திரங்கள், நீதிநூல்கள், எண் சுவடி, நிகண்டு 12 தொகுதிகள் ஆகியவற்றை மனனம் செய்வதே அதிகாரபூர்வமான கல்வித்திட்டமாக இருந்தது”4 என்று ராஜ்கௌதமன் தமிழகக் கல்வித்திட்டத்தில் நிகண்டுகளின் செல்வாக்கை எடுத்துரைத்துள்ளார். ஆனால் தமிழையும் வாழும் மொழிகளுள் ஒன்றாக வருங்காலத்து வைக்க வேண்டிய கடமை அறிவியலாளர்க்கு இருக்கிறது.“இல்லையெனில் தமிழ், புலவர் மொழி என்ற அளவிலேயே ஒதுக்கப்பட்டுவிடும் பேராபத்து காத்துக்கொண்டிருக்கிறது”5 என்னும் க.ப.அறவாணனின் கருத்து தமிழின் அடுத்த கட்ட வளர்ச்சியை அடையாளம் காட்டுவதாக உள்ளது.

**தொல்காப்பியரின் அகராதியியல் கொள்கைகள்**

தொல்காப்பியரின் அகராதியியல் கொள்கைகள் உயர்தனிச் செம்மொழியில் உதித்த நூல்களுள் மூத்தது தொல்காப்பியம். மொழிக்கும் வாழ்வுக்கும் இலக்கணம் இயம்பிய இதற்கும் பிற்கால அகராதியியலுக்கும் உள்ள தொடர்பு எண்ணி வியக்கத் தக்கதாகும். அகராதியியலின் ஒரு கூறு அகர நிரலாகும். தொல்காப்பியர் நூலின் தொடக்கத்திலேயே

**“எழுத்தெனப் படுவ**
**அகர முதல னகர இறுவாய்**
**முப்பஃதென்ப**
**சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே”6**

என அகரம் முதல் னகரம் ஈறாய் அமையும் தமிழ் நெடுங்கணக்கின் அகரநிரலைச் சுட்டியுள்ளார். மொழி மரபில், இன்னின்ன எழுத்துக்கள் மொழிக்கு முதலாவனஎன்றும் எந்தெந்த மெய்யுடன் கூடி முதலாவன என்றும் எவை எவை முதலாகா என்றும் விளக்கமாய் விளம்பியுள்ளார். இவையனைத்தும்

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

அகராதியியலுக்குத் துணை செய்வன ஆகும். உயிர் மயங்கியலில் அகர ஈறு தொடங்கி ஔகார ஈறு ஈறாய் அகரநிரலில் அமைத்துள்ளது தொல்காப்பியரின் அகராதியியல் உணர்வைப் பறைசாற்றுகிறது. இன்றைக்கு அகராதிகள் குறிப்பு நோக்கீட்டிற்குப் பயன்படுத்துவதைப் போல் பண்டைக் காலத்தில் பயன்படுத்தப்படவில்லை. தொல்காப்பியத்தில் அகரநிரல் பினபற்றப்படாமல் கடினமான சொற்களும் தனிச்சிறப்பு வாய்ந்த சொற்களுக்கும் விளக்கம் தருமளவிலே தான் அமைந்துள்ளது. தொல்காப்பியம் அடிப்படையில் இலக்கணநூல் எனினும் அகராதிக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதால் தமிழ் அகராதியியலுக்கு அடிகோலிய முதல் நூலாக அமைந்துள்ளது. கிரேக்கமும், இலத்தீனும் அகராதித்துறையில் இடைக்காலத்தில் அடைந்த வளர்ச்சிநிலையைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ்மொழி அடைந்துள்ளதைத் தொல்காப்பியம் புலப்படுத்துகிறது. ஏனெனில் கிறித்துபிறப்பதற்கு முன் முகிழ்ந்ததாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் அருஞ்சொற்களும் மரபுச்சொற்களும் உரியியல், மரபியல் முதலியபகுதிகள் வாயிலாக விளக்கப்படுகின்றன. எனவே அகராதித் துறையில் கிரேக்கத்தையும் இலத்தீனையும் விட தமிழ் முன்னணியில் நிற்கத் தொல்;காப்பியரை அடிப்படைக் காரணமாகச் சுட்டலாம்.

**ஒலிப்பு முறை**

எழுத்துக்களை முறையாக நவிலவில்லையென்றால் சொற்களின் பொருள் வேறுபட்டு விடும். எனவே பேசுவதைப் பிறர் பிழையறவும், தெளிவுறவும் புரிந்துகொள்ள முறையான ஒலிப்பு இன்றியமையாதது. இதனால் தான் அகராதிகளில் ஒலிப்பு முறை சுட்டப்படுகிறது. மொழியியலார் ஒலி ஆய்வுக்கு மூன்று முறைகளைப் பயன்படுத்துவர்: 1. இயல்பொலியியல் 2. கேட்பொலியியல்,3. ஒலிப்பொலியியல் இம்மூவகை ஒலியியல்களுள் ஒலிப்பொலியியல் அகராதிக்கலையின் குறிக்கத்தக்கக் கூறுகளுள் ஒன்றாக அமைந்துள்ளது.

தொல்காப்பியத்தின் பிறப்பியல் தமிழ்மொழியின் ஒலிப்பொலியியல் ஆகும். மேனாட்டுப் பேரகராதிகளில் காணப்படும் ஒலிப்பு அட்டவணை போன்று தமிழ்ப் பேரகராதிகளிலும் ஒலிப்புமுறை காட்டுவதற்குத் தொல்காப்பியப் பிறப்பியல் ஓரளவு துணைபுரிகிறது. புதிய சொற்களையும் புதிய பொருள்களையும் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்னும் கருத்தினராய்த் தொல்காப்பியர் இருந்தார் என்பதும் தெளிவாகிறது. தொல்காப்பிய உவமையியல் பிற்கால அணியிலக்கணக் கலைக்குத் தளமானதைப் போல், உரியியல் முதலிய சில இயல்கள் சொற்பொருண்மை இயலுக்குக் களமாய் அமைந்துள்ளன. இவ்வாறு தொல்காப்பியம் முழுக்க முழுக்க ஒரு பேரகராதியாய் இலங்காது போயினும், அகராதியியலுக்கு அடிகோலிய நிகண்டுகளுக்கு வித்தூன்றிய தொடக்கநூல் என்பதில் ஐயமில்லை.

**தமிழ் அகராதிகளின் நடை**

வடமொழி, தமிழ் ஆகியவற்றுள் அகராதியியலின் தொடக்கம் யாப்பு நடையில் அமைந்தது. மனப்பாடம் செய்வதற்கு ஏதுவாய் இம்முறை பின்பற்றப்பட்டது. குறிப்பு நோக்கீட்டின் இன்றியமையாமை கருத்திற் கொள்ளப்படவில்லை. மனனமே முதலிடம் பெற்றது. ஆனால் மேற்கத்திய அகராதியியலில் யாப்பு நடை எப்போதும் இடம் பெற்றதில்லை. அகர நிரல் கிழக்கிலும் மேற்கிலும் தொடக்ககால அகராதியியலில் அமையவில்லை.

பல படிமுறை வளர்ச்சிக்குப் பின்னரே அகர நிரல் முழுமையாக அமைந்தது. அருஞ்சொற்கள் மட்டுமே கிழக்கிலும் மேற்கிலும்அகராதியியலின் தொடக்க நிலை பொருள் விளக்கப்படுவதற்கு உரியனவாய்க் கொள்ளப்பட்டன. கிழக்கிலும் மேற்கிலும் பொருள் சுட்டப்பட்ட சொற்கள் பொருளடிப்படையில் தொடக்க நிலையில் பகுக்கப்பட்டிருந்தன. தமிழ் நிகண்டுகளில் இத்தகு பகுப்புமுறை இருப்பினும், தமிழ் அகராதியியலுக்குத் தோற்றுவாய் செய்த தொல்காப்பியத்தில் “உரியியல்” என்னும் தலைப்பின் கீழ் பொருள் விளக்கப்பட்டுள்ள உரிச்சொற்கள் பொருளடிப்படையில் பாகுபாடு செய்யப்படவில்லை. தமிழில் தொல்காப்பியரால் கால்கோளிடப்பட்ட அகராதியியல், படிப்படியாக வளர்ச்சியுற்று இன்று முழுமையாகக் குறிப்பு நோக்கீட்டியலாகத் திகழ்கிறது.

அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் எளிய சொற்கள் இப்போது அகராதிகளில் இடம்பெற்றுள்ளன. இலக்கிய வழக்குகள் கலைச்சொற்கள், மரபு வழக்காறுகள், சிறப்புப் பெயர்கள், குறுமொழிகள், வட்டார வழக்குகள் ஆகியனவும் அகராதிகளில் இப்போது இடம்பெற்றுள்ள ஒலிப்பு, சொற்பிறப்பியல் போன்ற கூறுகளும் அகராதியியலில் ஒரு பகுதியாக ஆகியுள்ளன. சுருங்கக்கூறின், அறிவியல் சார்ந்த பயனுள்ள தனித்துறையாக அகராதியியல் வளர்ந்துள்ளது.“தமிழில் போதிய அளவு அறிமுகமே ஆகாத ஆயிரக்கணக்கான துறைகள் உள்ளன. அவற்றை ஒட்டிப் பல்லாயிரக்கணக்கான சொற்கள் ஆங்கில மொழியில் பல்கி உள்ளன.அன்றியும் அச்சொற்கள் தரப்படுத்தப ;பட்டு, ஆங்கில அகராதிகளில் இடம்பெறச் செய்து புழக்கத்தில் கொண்டு வரப்பெற்று உள்ளன. தமிழில் இந்த நிலைமை இல்லை”6 என்னும் கூற்று தமிழ் அகராதிகள் சொல்வளம் உடையனவாகவும் தரப்படுத்தப்பட்டனவாகவும் புதிய சொற்களை அறிமுகப்படுத்துவனவாகவும் உருவாகவேண்டிய தேவையைச் சுட்டுகிறது.

**நிகண்டுகளின் பொருள் உணர்த்தும் முறை**

நிகண்டுகள் எல்லாம் சொல்லுக்குப் பொருள் கூறும் அகராதித் துறையைச் சேர்ந்தனவேயாகும். வடமொழியிலுள்ள வேதத்தின் ஆறு அங்கங்களுள் நிருத்தம் என்பது ஒன்று. அதில் “நிகண்டு” என ஒரு பகுதி உள்ளது. அப்பகுதியில் சொல்லுக்குப் பொருள் கூறும் தனி நூல்களும்நிகண்டு என வடமொழியில் அழைக்கப்பட்டன. புராணம், பிரபந்தம் முதலிய பெயர்களைப் போல நிகண்டு என்னும் தமிழ்ப் பெயரும் வழக்கில் வந்தது.

**அகராதிகளின் வகைப்பாட்டுக் கூறுகள்**

அகராதிகள் பல்வேறு வகைகளில் உருவாக்கப்படுகின்றன. பயன்பாட்டுத் தேவைக்கேற்பப் பலநிலையிலும் அகராதிகள் உருவாக்கப்படுவதால் இவை பல்கிப் பெருகியுள்ளன.

1. மொழி வேறுபாடு,
2. நூல்,
3. சொல் வேறுபாடு,
4. பொருளுறவு,
5. குறிப்பிட்ட பயன்பாடு,
6. சொற்சேர்க்கை நிலை,
7. அளவு

எனும் பல்வேறு அடிப்படைகளில் அகராதிகளை சுகுஸ்தா வகைப்படுத்தி உள்ளார். வட்டார வழக்கு, தொழிற்சொல், கொச்சை வழக்கு, முழுமொழி குறித்த அகராதிகள் மொழிவேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டவை. நூல் சொல்லடைவு, தொடரடைவு போன்றவை நூலை அடிப்படையாகக் கொண்டது. அயல்மொழிச் சொல் அகராதி, தலைப்பெழுத்துச் சொல் அகராதி, குறுக்க விளக்க அகராதி போன்றவை சொல்வேறுபாட்டை அடியொற்றியவை. ஒரு பொருள் பலசொல், மீச்சொல், உட்பொருட்சொல் அகராதிகள் போன்றவை பொருளுறவு சார்ந்தவை. பயிற்றகராதிகள், வரிவடிவ அகராதி, எதிர் அகரநிரல் அகராதி என்பன பயன்பாட்டு வகையினவாகும். மரபுத்தொடர் அகராதி, பழமொழி அகராதி, மேற்கோள் அகராதி, இணைச்சொல் அகராதி போன்றவை சொற்சேர்க்கை வகையினவாகும்.

**தொகுப்புரை**

பயன்பாட்டு மொழியியலின் கிளைகளுள் ஒன்றாக வளர்ந்துள்ள அகராதியியல் என்பது அகராதியில் சொற்களைப் பதிவுகளாய் அமைக்கும் நெறிமுறை பற்றிய அறிவியல் ஆய்வு ஆகும். பயனாளருக்கு அவர் தம் தாய்மொழியிலோ அயல்மொழியிலோ தகவல் தொடர்பு கொள்வதற்குத் துணைபுரிவதையும், பயனாளர் தாய்மொழியையோ அயல்மொழியையோ கற்றுக்கொள்ளத் துணைபுரிவதையும் இலக்குகளாகக் கொண்டு அகராதியியல் செயல்படுகிறது. மேற்கத்திய கல்விமுறையும் மேலைஇலக்கியத் தாக்கமும் தமிழில் அகராதிகளின் உருவாக்கத்திற்குத் துணைசெய்த போதிலும் அதற்கு முன்பே நிகண்டுகளின் பயன்பாடு தமிழில் வழங்கிவந்துள்ளது. தற்கால அகராதிகளின் முன்னோடியாக நிகண்டுகள் விளங்கினாலும் அகராதியியலின் கூறுகள் தொல்காப்பியத்திலிருந்து தொடங்கித் தமிழ்ப்பரப்பில் பரவலாகக் காணப்படுகின்றன. மொழி வேறுபாடு, நூல், சொல் வேறுபாடு, பொருளுறவு, குறிப ;பிட்ட பயன்பாடு, சொற்சேர்க்கை நிலை, அளவு ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு வகைப்பாடுகளாக வளர்ந்து வருகின்ற அகராதிகள் இணையத்திலும் தம் பரப்பை விரிவுப்படுத்தி இணையத் தமிழகராதிகளாக இன்று சொற்பொருள் காணத் துணைசெய்கின்றன.

**சான்றெண்விளக்கம்**

1.கி.கருணாகரன், வ.ஜெயா, மொழியியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, நான்காம் பதிப்பு, 2017, ப.10

2.பெ.மாதையன், அகராதியியல், தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1997, ப. எiii

3.பெ.மாதையன், மு.நூ., ப. எiii

4.ராஜ்கௌதமன், தமிழ்ச்சமூகத்தில் அறமும் ஆற்றலும், விடியல் பதிப்பகம், கோவை, முதற்பதிப்பு, 2008,ப.118

5.க.ப.அறவாணன், தமிழர் தம் இலக்கியம்- பண்பாடு- அரசியல்- கல்வி, தமிழ்க்கோட்டம் வெளியீடு, புதுச்சேரி, முதற்பதிப்பு, 2000,ப.185

6. ச.பி.குப்தா, அறிவியலும் அதன் நெறிமுறைகளும், க.ப.அறவாணன் (மொ.பெ.), புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி,

**துணைநூல்பட்டியல்**

1.. அகத்தியலிங்கம் ச. திராவிட மொழிகள்-1,
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை-108
மறுபதிப்பு,2000 .

2. அரணமுறுவல்.ந. அமரநத்தா, மொழிபெயர்ப்புக்கலை- இன்று,
பாவை பப்ளிகே~ன்ஸ்,
சென்னை
முதற்பதிப்பு,2005